# அருப்புக்கோட்டை நகராட்சி

## விகாரி ஆண்டு புரட்டாசி மாதம் நாள் :30.09.2019 திங்கள் கிழமை மாலை 4.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் அறையில் நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

## முன்னிலை :– திரு.S.புவனேஸ்வரன் (எ) அண்ணாமலை., தனி அலுவலர்

**பொருள் 1 :** நகராட்சி ஆணையாளரின் ஆகஸ்ட் – 2019 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்

**அலுவலககுறிப்பு:**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம் :**

பதிவு செய்யப்பட்டது.

**தீர்மான எண்.768**

**பொருள் 2 :** நகராட்சி பொறியாளரின் ஆகஸ்ட் – 2019 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்

**அலுவலககுறிப்பு:**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம் :**

பதிவு செய்யப்பட்டது

**தீர்மான எண்.769**

**பொருள் 3 :** அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 09, சொக்கலிங்கபுரம் ஹைஸ் ஸ்கூல் ரோடு, கதவு எண் 15ஏக்கு சொத்துவரி பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக இந்நகராட்சி ஆணையாளரை 2ம் பிரதிவாதியாக சேர்த்து அருப்புக்கோட்டை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் சாந்தா, கோதையம்மாள், லட்சுமி, கிருஷ்ணவேணி மற்றும் சந்திரா என்பவரால் தொடரப்பட்ட வழக்கு எண் 184/2019 வழக்கிற்கு திரு.D.சங்கரன் வழக்கறிஞர் ஆஜராவதற்கும், அதற்காகும் உத்தேச செலவினத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழஙகலாம். ந.க.எண்.6133/2019/அ2

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.770**

**பொருள் 4 :** திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி துப்புரவு பணியாளர்கள், மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை நேரடியாக கைகளால் அள்ளக்கூடாதென தெரிவிக்கப்பட்டுள்ளதன் பேரில் மக்கும், மக்காத குப்பைகளை அருப்புக்கோட்டை நகர்ப்பகுதிகளிலிருந்து அகற்றிட கடந்த 2016 ஆம் ஆண்டில் துப்புவரவு பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் வழஙகப்பட்டது. அதுபோல் 2019ஆம் ஆண்டும் துப்புரவு பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணஙகள் வழஙகவேண்டியுள்ளதால், அருப்புக்கோட்டை நகராட்சி துப்புரவு பணியாளர்களுக்கென கீழ்க்காணும் பாதுகாப்பு உபகரணஙகள் கொள்முதல் செய்திட ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ.5,00,000/– வரை செலவு செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | தேவைப்படும் பாதுகாப்பு உபகரணஙகள் | தேவைப்படும் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ஒளிரும் தன்மை கொண்ட சிவப்பு மேல் சட்டை | 111 எண்ணம் |
| 2. | கையுறை | 111 எண்ணம் |
| 3. | காலுறை | 111 எண்ணம் |
| 4. | தலைகவசம் | 111 எண்ணம் |
| 5. | முக கவசம் | 111 எண்ணம் |

**அலுவலகக்குறிப்பு**

பொது சுகாதார பணி அவசியம்கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.5854/2019/எச்2

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.771**

**பொருள் 5 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட நகராட்சி அலுவலக வளாகம் மதுரை ரோடு நீர்தேக்கத்தொட்டி வளாகம், கட்டங்குடி Booster Station ஆகிய இடங்களில் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பு (Rain Water Harvesting) அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.0.70 இலட்சத்துக்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.743, நாள்.29.07.2019ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 13.09.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.A.ரவிக்குமார் அருப்புக்கோட்டை | 0.24 % மதிப்பீட்டு தொகையை விட குறைவாக |
| 2. | திரு.S.K.சுப்பாரெட்டியார் அருப்புக்கோட்டை | 1.78 % மதிப்பீட்டு தொகையை விட அதிகமாக |

**அலுவலகக் குறிப்பு :–**

வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையை விட 0.24% குறைவாக கொடுத்துள்ள திரு.A.ரவிக்குமார், ஒப்பந்ததாரர் அருப்புக்கோட்டை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண்.4490/2019/இ1

**தீர்மானம் :**

அலுவலகக்குறிப்பை ஏற்று அனுமதிப்பட்டது.

**தீர்மான எண்.772**

**பொருள் 6 :** அருப்புக்கோட்டை நகராட்சியில் தற்போது UTIS – Phase -2 செயலாக்கம் செய்ய Latest Configuration ன்படி புதிய கணினிகள், பொது பிரிவுக்கு High End Laser Printer, ஒரு ஜெராக்ஸ் மிசின் வாங்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்துக்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.746, நாள்.29.07.2019ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 13.09.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | M/s.Genuine Computers, Contractor, Sivakasi | 1.11 % மதிப்பீட்டு தொகையை விட அதிகமாக |
| 2. | M/s.Victory System Service Contractor, Sivakasi | மதிப்பீட்டு விலை |

**அலுவலகக் குறிப்பு :—**

வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலைக்கே கொடுத்துள்ள M/s.Victory System Service Contractor, Sivakasi அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண்.5189/2019/இ1

**தீர்மானம் :**

அலுவலகக்குறிப்பை ஏற்று அனுமதிப்பட்டது.

**தீர்மான எண்.773**

**பொருள் 7 :** அருப்புக்கோட்டை நகராட்சியில் பயன்படுத்தப்பட்டுவரும் பழைய கணினிகள் 20 எண்ணம், UPSகள் 4 எண்ணம், லேசர் பிரிண்டர்கள் 5எண்ணம், டாட்மெட்ரிக் பிரிண்டர்கள் 5 எண்ணம் மற்றும் ஜெராக்ஸ் மிசின்கள் 2 எண்ணம் ஆகியவைகளின் ஆண்டு பராமரிப்புபணிக்கு மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்துக்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.745, நாள்.29.07.2019ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 13.09.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | M/s.Genuine Computers, Contractor, Sivakasi | 1.95 % மதிப்பீட்டு தொகையை விட அதிகமாக |
| 2. | M/s.Victory System Service Contractor, Sivakasi | 0.06 % மதிப்பீட்டு தொகையை விட குறைவாக |

**அலுவலகக் குறிப்பு :—**

வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையை விட 0.06% குறைவாக கொடுத்துள்ள M/s.Victory System Service Contractor, Sivakasi அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண்.5188/2019/இ1

**தீர்மானம் :**

அலுவலகக்குறிப்பை ஏற்று அனுமதிப்பட்டது.

**தீர்மான எண்.774**

**பொருள் 8 :** அருப்புக்கோட்டை நகராட்சி திருப்புவனம் தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள திறந்தவெளி கிணற்றில் மராமத்து பணி மேற்கொண்டு புதியதாக மோட்டார் பம்பு செட் மற்றும் அதற்குறிய பைப்லையன் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.5.50 இலட்சத்துக்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.744, நாள்.29.07.2019ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 13.09.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.R.சுந்தர்ராஜ் விருதுநகர் | 0.13 % மதிப்பீட்டு தொகையை விட குறைவாக |
| 2. | திருமதி.R.பஞ்சவர்ணம் அருப்புக்கோட்டை | 0.82 % மதிப்பீட்டு தொகையை விட அதிகமாக |

**அலுவலகக் குறிப்பு :–**

வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையை விட 0.13% குறைவாக கொடுத்துள்ள திரு.R.சுந்தர்ராஜ், ஒப்பந்ததாரர் விருதுநகர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண்.4747/2019/இ1

**தீர்மானம் :**

அலுவலகக்குறிப்பை ஏற்று அனுமதிப்பட்டது.

**தீர்மான எண்.775**

**பொருள் 9 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான அங்காடி மஙகலம் நீரேற்றும் நிலையத்தில் உள்ள பழுதடைந்துள்ள பழைய EB சர்வீஸ்வயர்கள் மற்றும் உட்புற வயர்களுக்கு பதிலாக புதியதாக வயர்கள் மாற்றி அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.1.20 இலட்சத்துக்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.723, நாள்.29.07.2019ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 13.09.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.R.சுந்தர்ராஜ் விருதுநகர் | 0.13 % மதிப்பீட்டு தொகையை விட குறைவாக |
| 2. | திருமதி.R.பஞ்சவர்ணம் அருப்புக்கோட்டை | 0.93 % மதிப்பீட்டு தொகையை விட அதிகமாக |

**அலுவலகக் குறிப்பு :–**

வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையை விட 0.13% குறைவாக கொடுத்துள்ள திரு.R.சுந்தர்ராஜ், ஒப்பந்ததாரர் விருதுநகர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம். ந.க.எண்.3889/2019/இ1

**தீர்மானம் :**

அலுவலகக்குறிப்பை ஏற்று அனுமதிப்பட்டது.

**தீர்மான எண்.776**

**பொருள் 10 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 19 முதல் 36 வரை உள்ள பகுதிகளில் மொத்தம் உள்ள 405 எண்ணம் அடிகுழாய்களில் ஏற்படும் பழுதுகளை செப்டம்பர் 2019 முதல் ஆகஸ்ட் 2020 வரை ஓர் ஆண்டிற்கான பழுது பணிகள் பார்ப்பதற்கு பராமரிப்பிற்கான உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.7.00 லட்சம் ஆகும். மேற்கண்ட பணியினை குடிநீர் வழஙகல் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழஙகலாம். ந.க.எண்.5869/2019/இ1

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.777**

**பொருள் 11 :** அருப்புக்கோட்டை நகராட்சியில் நடைபெற்றுவரும் பணிகளின் விபரஙகளை சுதந்திர தின சிறப்பு –தொழில்மலர் 2019 (தமிழ் முரசு) நாளிதழில் விளம்பரம் செய்தவகையில் விளம்பரக்கட்டணம் உரிய செலவினத்தொகை ரூ.9,900/-ஐ மேற்படி நிறுவனத்திற்கு வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழஙகலாம். ந.க.எண்.5186/2019/அ1

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.778**

**பொருள் 12 :** அருப்புக்கோட்டை நகராட்சியில் மாநில பேரிடர் மேலாண்மை நிதி SDRF 2019 – 20 ன் கீழ் G.O.(Ms) No.125 Revenue and Disaster Management Department Disaster Management wing, D.M.III(1) section Dt.2.05.2019ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து கீழ்கண்ட பகுதிகளில் ஆழ்துளை கிணறு புனரமைக்கும் பணிகள் (Redrilling of borewell) மேற்கொள்ளப்பட்டதில் மதிப்பீட்டு விலையைவிட கூடுதல் தொகைக்கு பணி மேற்கொள்ளப்பட்டதால் மீதிப்பீட்டுத்தொகை போக மீதமுள்ள கீழ்கண்ட தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழஙகுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ. எண்.** | **தெருவின் பெயர்** | **மதிப்பீட்டுத்தொகை** | **மதிப்பீட்டு விலையைவிட கூடுதல் தொகை** |
|---|---|---|---|
| 1. | நெசவாளர் காலனி 9வது தெரு | 1,18,000 | 6,561 |
| 2. | மேலரத வீதி (கள்ளர் தெரு) | 1,18,000 | 12,720 |
| 3. | தெற்கு ரதவீதி | 1,14,000 | 11,921 |
| 4. | எம்.டிஆர்.நகர் கிழக்கு | 1,14,000 | 5,013 |
| 5. | மஙகளம்மாள் ரைஸ்மில் தெரு | 1,18,000 | 12,783 |

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 3752/2019/இ1

**<u>தீர்மானம் :</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.779</u>**

(ஒம்) திரு.S.புவனேஸ்வரன்
(எ) அண்ணாமலை.,
தனி அலுவலர்
அருப்புக்கோட்டை நகராட்சி

/உண்மைநகல்/

மேலாளர்,
அருப்புக்கோட்டை நகராட்சி